பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 05 செவ்வாய்க்கிழமை (20-07-1993) UTHAYAN –A Lively National Tamil Daily கதிர் 234

# ஜெயலலிதா உண்ணாவிரதத்தால்

# தமிழகத்தில் பதற்றம்!

## பல இடங்களிலும் வன்செயல்

சென்னை, ஜூலை 20

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தாம் நேற்று முன்தினம் ஆரம்பித்த காலவரையறையற்ற உண்ணா விரதத்தை நேற்று தொடர்ந்து மேற்கொண்டார்.

நேற்று தமிழ் நாட்டில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது பல இடங்களிலும் வன்செயல் சம்பவங்கள் இடம்பெற்றன.

உண்ணாநோன்பை தொடரக் கூடாது என்று டாக்டர்கள் ஆலோசனை கூறியிருந்தாலும், தாம் காவிரிநீர்த் தகராறு தீர்க்கப்படும் வரை தொடர்ந்து உண்ணாவிரதம் இருக்கப் போவதாக ஜெயலலிதா நேற்றுத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஆர். வெங்கடராமன், மகாராஷ்டிரத்தின் முன்னாள் ஆளுநர் சி. சுப்பிரமணியம், முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் சமது, தி. க. பொதுச்செயலாளர் வீரமணி, நடிகர் ரஜனிகாந்த், நடிகர் கமல

(2 ஆம் பக்கம் பார்க்க)

## டில்லியில் முக்கிய பேச்சு

புதுடில்லி, ஜூலை 20

ஜெயலலிதாவின் உண்ணாவிரதத்துக்குக் காரணமான காவிரி நீர்ப்பிரச்சினை குறித்து புதுடில்லியில் நேற்றிரவு முக்கிய பேச்சுகளை பிரதமர் நரசிம்மராவ் நடத்தவிருந்தார்.

வெளியூர் பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர் ராவ், ஜெயலலிதா உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்ததை அடுத்து நேற்று அவசரமாக புதுடில்லிக்கு திரும்புவதாக இருந்தார்.

நீர்வள அமைச்சர் வித்யா சரண் சுக்லாவும் வெளிமாநிலப் பயணத்தை ரத்துச் செய்துவிட்டு புதுடில்லிக்கு வருமாறு அழைக்கப்பட்டிருக்கிறார்.

அவர் காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து நேற்றிரவு பிரதமர் ராவுடன் ஆராயவிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

உண்ணாவிரதம் இருக்கும் முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடல் நிலை குறித்து பிரதமர் ராவ் விசாரித்தார்.

இதேவேளை—

முதலமைச்சரின் உண்ணாவிரதத்தால் தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு குலைந்திருப்பதாகவும்—

அரசியல் யாப்பின்படி ஜனாதிபதி ஆட்சியை மாநி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மேலதிகமாக 4,000 துருப்புகள்

## மட்டக்களப்பு நகரில் குவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

இவ்வார இறுதியில் மட்டக்களப்பில் இடம்பெறவிருக்கும் ஜனாதிபதி இடம்பெயர் சேவையை முன்னிட்டு மட்டக்களப்பு நகரில் என்றுமில்லாதவாறு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலதிகமாக பொலீஸ், இராணுவத்தைச் சேர்ந்த 4 ஆயிரம் பேர் நகரில் குவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நகரில் மேலதிகமாக குவிக்கப்பட்ட துருப்புகள் நகரில் உள்ள இரு பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டிருக்கின்றன.

நகரின் நுழைவாயிலில் அமைக்கப்பட்டிருக்கும் சோதனை நிலையங்களில் மேலதிக பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நகருக்குள் பொதுமக்கள் எடுத்துவரும் சகல பொதிகளும் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

நகரில் நடமாடும் பொதுமக்கள் அடிக்கடி முகமூடி நபர்களின் முன் நிறுத்தப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இரவு வேளைகளில் பொலீஸார் அடிக்கடி தமிழ் மக்களின் வீடுகளுக்குள் புகுந்து சோதனை, தேடுதல் மற்றும் கைது நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

படையினரின் கெடுபிடிகளால் நகர மக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டிருக்கிறது. (உ-6)

## மன்னார் மீனவரின் வலைகள்

## இந்திய மீனவரால் சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

இந்திய மீனவர்களின் படகுகள் மன்னார் கடல் பரப்புக்குள் ஊடுருவி மன்னார் மீனவர்களின் மீன்பிடி வலைகளை சேதப்படுத்துவதாகவும்—

இதனால் இருநாட்டு மீனவர்கள் மத்தியிலும் சச்சரவு தோன்றியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மன்னார்ப் பகுதி மீனவர்கள் இரவில் மீன்பிடிப்பதற்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர். இதனால் அவர்கள் பகலில் கடலில் சென்று தமது வலைகளை விரித்து விட்டு இருட்டுவதற்கு முன் கரைக்குத் திரும்பி விடுகின்றனர்.

இரவில் இக்கடற் பரப்பில் ஊடுருவும் இந்திய மீனவர்களின் படகுகள் மன்னார் மீனவர்களின் பெறுமதிவாய்ந்த வலைகளை சேதப்படுத்துவதாகவும்—

சில சமயங்களில் மன்னார் மீனவர்களின் வலைகளை இந்திய மீனவர்கள் அபகரித்துச் செல்வதாகவும் கூறப்படுகிறது.

தினசரி நூற்றுக்கு மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் மன்னார் கடற்பரப்பில் ஊடுருவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-6]

## ருகுணு, குமண நாளை வரும்

யாழ்ப்பாணம், ஜூலை 20

அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு "குமண" கப்பல் நேற்றுக் காலை கொழும்பிலிருந்து பருத்தித்துறையை நோக்கிப் புறப்பட்டதாக நேற்று மாலையில் யாழ்ப்பாணத்துக்கு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இக்கப்பலில் எடுத்து வரப்படும் பொருள்களின் பட்டியல் நேற்று மாலை வரை யாழ்ப்பாணத்துக்குக் கிடைக்கவில்லை இரண்டாயிரத்து 500 பரல் மண்ணெண்ணை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட 'ருகுணு' கப்பலும் மற்றும் 'குமண' கப்பலும் நாளை பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## பல்கலை. அனுமதிக்கான

## வெட்டுப்புள்ளி விவரம் அடுத்த வாரத்தில்!

1991ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சைக்குத் தோற்றியோரை பல்கலைக் கழகத்துக்கு அனுமதிப்பது தொடர்பான வெட்டுப்புள்ளி விவரம் அடுத்த வாரத்திற்கு முன்னர் வெளியாகும் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

வெட்டுப்புள்ளி விவரத்தை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தயாரித்துமுடித்திருப்பதாகவும்—

யாழ். மாவட்டத்துக்கான மருத்துவத்துறை வெட்டுப்புள்ளி 260 புள்ளிகளாக இருக்கும் என்றும்—

இதேபோன்று கொழும்பு மற்றும் பிற மாவட்டங்களிலும் மருத்துவத்துறை வெட்டுப்புள்ளி நிலை குறைவாகவே இருப்பதாகவும்—

கொழும்புடன் தொடர்பு கொண்ட பல்கலைக்கழக அதிகாரி ஒருவர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார். (உ-3)

## கண்டியில் கடந்த வாரம்

## 12 தமிழ்ப் பெண்கள் கைது

கொழும்பு, ஜூலை 20

கண்டிப் பொலீஸார் கடந்த வாரம் நடத்திய திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலின் போது பேராதனையில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்த 12 தமிழ்ப் பெண்கள் கைது செய்யப்பட்டனர். மஹியாவையில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்த 6 தமிழ் இளைஞர்களும் அப்போது கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பெண்கள் தங்கியிருந்த வீடு தனியார் நிறுவனம் ஒன்றினால் நிர்வகிக்கப்படுகிறது. [உ-எ]

## சிறிமா வீட்டின் முன் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 20

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அனுரா பண்டாரநாயக்கா வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து நேற்று கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ரொஸ்மிட்பிளேஸ் இல்லத்தின் முன்னால் அனுரா ஆதரவாளர்கள் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

## சு. க. மத்திய குழுக் கூட்டம் திடீரென இடமாற்றம்

கொழும்பு, ஜூலை 20

சிறிமாவின் வீட்டின் முன்னால் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றதால் நேற்று அவரது வீட்டில் நடைபெறவிருந்த சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் திடீரென இடம் மாற்றப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவி என்ற முறையில் சிறிமாவோ உத்தியோகபூர்வமாகப் பயன்படுத்தும் சிராவஸ்தி இல்லத்தில் கூட்டம் நடைபெற்றது.

கட்சி அதிருப்தியாளர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. (உ-6)

## கட்சி மாறுவதற்கு வழி செய்யும்

## நெவிலின் சட்டமூலத்தை அவரது கட்சியே எதிர்க்கும்

கொழும்பு, ஜூலை 20

எம். பி. ஒருவர் கட்சி மாறினால், அவர் எம். பி. பதவியை இழப்பார் எனத் தெரிவிக்கும் அரசமைப்பின் ஷரத்தை மாற்றுவதற்குக் கோரும் பிரேரணையை எதிர்த்து நாடாளுமன்றத்தில் வாக்களிப்பது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்திருக்கிறது.

மேற்படி அரசமைப்பைத் திருத்துவதற்கான சட்டமூலம் ஒன்றை "அரசமைப்புத் திருத்தத்திற்கான 17ஆவது சட்டமூலம்" என்ற பெயரில் சுதந்திரக்கட்சி எம். பியான நெவில் பெர்னாண்டோ நாடாளுமன்றில் சமர்ப்பித்திருப்பது தெரிந்ததே.

கட்சியின் முன் அனுமதியின்றி, தமது கட்சி எம். பி. ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்தச் சட்டமூலத்தை

(2 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக அனுமதி:

# 92 இல் சித்தியடைந்தோருக்கு இவ்வருட இறுதியில் வகுப்பு?

கொழும்பு, ஜூலை 20
1992 ஆம் ஆண்டின் ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சைக்குத் தோற்றியோரையும் உடனடியாக பல்கலைக்கழகத்துக்கு அனுமதிப்பது குறித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆலோசித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

1991 இல் ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சைக்குத் தோற்றி அப்பரீட்சைப் பெறுபேறுகளில் தகுதி பெற்றோருக்கு இரண்டு வருடங்களின் பின்னர்—எதிர்வரும் செப்டம்பர் மாதம் அளவிலேயே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படவிருக்கிறது.

இத்தகைய அநாவசிய தாமதங்களையும், மாணவர்களின் இளமைக்காலம் வீணாகுவதையும் தவிர்ப்பதற்காக 1992 இல் பரீட்சைக்குத் தோற்றியோருக்கு இவ்வருட இறுதியிலேயே பல்கலைக்கழக அனுமதி வழங்க பல்கலைக்கழக ஆணைக்குழு முயற்சித்து வருகிறது.

1991 ஆம் ஆண்டு மாணவர்களை அனுமதித்து, மூன்று மாத காலத்தினுள் 92 ஆம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான கல்வி ஆண்டை ஆரம்பிக்க முடியுமா என அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் எல்லா பீடங்களையும் பல்கலைக்கழக ஆணைக்குழு விசாரித்து வருகிறது.

மூன்று மாத இடைவெளியில் இரண்டு மாணவர் குழாம்களையும் (Batch) சேர்த்துக்கொள்ள சில பல்கலைக்கழகங்கள் இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது
(உ-3)

## வில்லூன்றித் தீர்த்தத்தில் பெருந்திரளான மக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 20
ஆடி அமாவாசை தினமான நேற்று வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர்.

வில்லூன்றி விநாயகப் பெருமான் காலை 7 மணிக்கு புனித தீர்த்தத்துக்கு எழுந்தருளினார். பல வருடங்களுக்குப் பின்னர் பெருமானின் தீர்த்தவாரி நேற்று அங்கு நடைபெற்றது.

அதிகாலை 5 மணி தொடக்கமே பெரும் மக்கள் கூட்டம் வில்லூன்றி ஆலயத்தில் திரண்டது. தீர்த்தக்கேணி வளாகமும், அதற்குச் செல்லும் பாதையும் கேணியிலிருந்து கடற்கரைக்குச் செல்லும் பாதையும் புதிதாக அமைக்கப்பட்டிருப்பது அடியார்களுக்குப் பெரும் வசதியாக இருந்தது. தீர்த்த வளாகம் மிகத் துப்புரவாகவும் புனிதமாகவும் இருக்கிறது.

நேற்றைய ஆடி அமாவாசை விழாவில் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் உட்பட பல பிரமுகர்களும் தீர்த்தமாடித் தர்ப்பணம் செய்து கொண்டனர்.

காலை 8.30 மணிக்குப் பின்னர் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் அடிக்கடி கேட்ட போதிலும் மக்கள் தீர்த்தமாடுவதிலும், ஆலய வழிபாட்டிலும் தொடர்ந்து ஈடுபட்டிருந்ததைக் காணமுடிந்தது.
(அ)

## பர்வத பத்தினி 7 ஆம் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 20
ஆவரங்கால் நடராச இராமலிங்கேஸ்வரர் தேவஸ்தான பர்வத பத்தினி அம்பாள் 7ஆம் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை (20-7-93) நடைபெறுகிறது.

இன்றைய திருவிழாவில் விசேட நிகழ்ச்சிகளாக மாலை 5 மணி தொடக்கம் மேளக் கச்சேரியும், இரவு 9 மணி தொடக்கம் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும். (அ)

## நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 20
ஜூன் மாதத்திற்கான — நான்கு வாரங்களுக்குரிய — இடம் பெயர்ந்தவர்களுக்கான இரண்டு கட்ட இலவச உலர் உணவுப் பொருள்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.
(உ-162)

## கோடீஸ்வரர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூலை 20
சுனில் பெர்னாண்டோ என்ற பெயருடைய கோடீஸ்வர தொழில் அதிபர் நீர்கொழும்பு, வைக்கல் என்ற இடத்தில் உள்ள தமது வீட்டில் டெலிவிஷன் பார்த்துக் கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்களால் சுடப்பட்டு வாரம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அந்த இளைஞர்கள் வீட்டுக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் வீட்டின் காவலாளியைக் கத்தியால் குத்தினார்கள். காவலாளி கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

உயிரிழந்த கோடீஸ்வரர் வென்னப்புவையில் பல ஒட்டுத் தொழிற்சாலை உரிமையாளராவார்.


எமது புதிய வெளியீடுகள்

★ விஜயகாந்த் ★ சுகன்யா சக்கரை தேவன்
★ நிழல்கள் ரவி ரூபினி பத்தினிப் பெண்

வீடியோ விமல்
117, மானிப்பாய் வீதி, இந்து சந்தி, யாழ்ப்பாணம்.
(26588)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 25 — 02 — 1937
உதிர்வு: 10 — 08 — 1991



அமரர்
### பொன்னுத்துரை பரமானந்தன்
(ஓய்வுபெற்ற உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர்)

திதி: 20 — 07 — 1993

உங்கள் சிந்தனைகளை நனவாக்க
நாம் புறப்பட்டு ஈராண்டானதும் நிஜமல்லவோ
உங்கள் பிரிவுத்துயரை ஜீரணிக்க முடியாமல்
வாடும் எங்களுக்கு
உங்கள் அறிவுரைகளே உயிரூட்டுகின்றன,

அன்பே உருவான தெய்வமே!
என்றென்றும் உங்கள் பணி தொடர்ந்திடுவோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேர்த்தி,
உறவினர்கள்.

"ஆனந்த அகம்"
ஊரெழு வடக்கு,
சுன்னாகம்.
(26570)

## நல்லூரில் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 20
யாழ். மாநகரசபை, அதன் சட்ட திட்டங்களையும் பொறியியல் அமைப்பு நடவடிக்கைகளையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்த கண்காட்சி ஒன்றை நல்லைக் கந்தன் உற்சவ காலத்தில் நடாத்தவுள்ளது.

மாநகரசபையின் திட்டமிடல், மின்சார, மராமத்து, நீர்விநியோகப் பிரிவுகள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. யாழ். மாநகரசபையின் பொறியியல் பிரிவுகள் அமைந்துள்ள நல்லூர் இந்து விடுதிக்கு முன்பாக, நல்லூர் உற்சவ காலத்தில் தினமும் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை பொதுமக்கள் கண்காட்சியை பார்வையிடலாம்.

யாழ். மாநகர சபையின் புதிய நகரத் திட்ட வரைபடங்களும் கண்காட்சியில் வைக்கப்படவுள்ளன.

## ஜெயலலிதா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஹாசன் ஆகியோர் நேற்று முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சென்று பார்த்தனர்.

பொதுமக்கள் அமைதி பேணவேண்டும் என்றும் மறியல் போராட்டங்களில் ஈடுபடக்கூடாது என்றும் முதலமைச்சர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக அ.தி.மு.க. தொண்டர்கள் மாநிலம் எங்கும் நடத்தி வரும் மறியல் போராட்டங்களினால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பஸ், ரயில்கள் ஓடவில்லை; இதனால் அரச அலுவலகங்களுக்கு குறைந்த எண்ணிக்கையிலே ஊழியர்கள் கடமைக்குச் சென்றனர். பாடசாலைகள் இயங்கவில்லை, அ.தி.மு.க தொண்டர்கள் மத்திய அரசு அலுவலகங்கள் முன்பு மறியல் செய்தனர்.

மறியல் போராட்டங்களில் ஈடுபட்ட அ.தி.மு.கவின் எம்.எல். ஏக்கள் மற்றும் எம்.பிக்கள் பலர் கைதாகி பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

இதற்கிடையில்—
ஆளுநர் சென்னாரெட்டி உடனடியாகத் தலையிட்டு தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமையைச் சீரமைக்க வேண்டும் என தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி அவசரக் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜெயலலிதாவின் உண்ணாவிரதத்தை அடுத்து அ.தி.மு.கவினர் மாநிலத்தில் வன்செயல்களில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் ஆளுநருக்கு அனுப்பிய அவசரச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அ.தி.மு.கவின் எம்.எல். ஏக்களும் எம்.பிக்களும் மாநிலம் எங்கும் வன்செயல்களைத் தூண்டி விடுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடைகளும் வர்த்தக நிறுவனங்களும் தாக்கப்படுவதாகவும் மத்திய அரசு அலுவலகங்கள் சூறையாடப்படுவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.
(உ-எ)

## பதவி விலகினர்

இஸ்லாமபாத், ஜூலை 20
பாகிஸ்தானில் இடம்பெற்று வந்த அரசியல் நெருக்கடிகளை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் பிரதமர் நவாஸ் ஷெரீபும், ஜனாதிபதி குலாம் இஸ்காக்கானும் நேற்று தத்தமது பதவிகளை விட்டு விலகினர்.

காபந்து பிரதமராக மொகன் குறோஷியும், தற்காலிக ஜனாதிபதியாக செனட் சபையின் தலைவர் ஜசீன் ஹஸாரும் பதவியேற்றனர்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்துக்கான நேர்தல் அக்டோபர் 6 ஆம் திகதியும் மாகாண சபைகளுக்கான தேர்தல் 9 ஆம் திகதியும் நடைபெறும்.
(உ-6)

## நேற்று ஆட்டம் நடக்கவில்லை

அஸ்கிரிய, ஜூலை 20
இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் ஆரம்பமான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி நேற்று மழை காரணமாக நடைபெறவில்லை. இன்று ஆட்டத்தின் ஓய்வு நாளாகும்.

இதுவரை இந்த ஆட்டத்தில் இலங்கை 3 விக்கெட்டுகளை இழந்து 24 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறது.
(உ-3)

## நெவிலின் சட்டமூலத்தை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
எதிர்ப்பது என சுதந்திரக்கட்சியின் மத்திய குழு நேற்றுக் கூடி முடிவு செய்தது.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து, நாடாளுமன்றத்துக்கு முழு அதிகாரத்தையும் வழங்கும் வகையிலும் மனித உரிமைகள் நிலைநாட்டப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலும் அரசமைப்பு முற்றாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். அது இல்லாமல் தற்போதைய அரசமைப்புக்கு திருத்தம் கொண்டு வருவதால் எந்தப் பயனுமில்லை என கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது
(உ-6)


எமது நேற்றைய வீடியோ வெளியீடுகள்

விஜயகாந்த், சுகன்யா, செந்தில்
★ சக்கரைத் தேவன் ★
K. R. விஜயா, பேபி ஷாம்லி
★ ஆத்தா வேப்பிலைக்காரி ★
ஜனகராஜ், நிழல்கள் ரவி, ரூபினி
★ பத்தினிப் பெண் ★

இத்துடன் ஓடியோ வெளியீடுகள்

| | |
|---|---|
| ஜென்டில் மேன் | பாண்ட் மாஸ்டர் |
| அமராவதி | தெய்வ சக்தி |
| கோகுலம் | தெய்வக் குழந்தை |
| உழைப்பாளி | சக்கரைத் தேவன் |

காத்தவராஜ கிருஷ்ண காமராஜன்
பொறந்த வீடா புகுந்த வீடா

சுப்பலோ வீடியோ ஓடியோ சென்ரர்
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/5488)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுநர் கோரிக்கையை நிராகரித்தார்:

# உண்ணாவிரதத்தை கைவிட முதல்வர் ஜெயலலிதா மறுப்பு

சென்னை, ஜூலை 20

உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி மாநில ஆளுநர் டாக்டர் எம். சென்னா ரெட்டி விடுத்த வேண்டுகோளை, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நிராகரித்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு ஆளுநர், எம். ஜி. ஆர். சமாதி முன்னிலையில் உண்ணாவிரதமிருக்கும் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசினார். ஒரு மணி நேரம் வரையில் இப்பேச்சுக்கள் நீடித்தன. அப்போதே உண்ணாவிரதத்தை கைவிடும் கோரிக்கையை ஆளுநர் முதலமைச்சரிடம் சமர்ப்பித்தார்.

நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி உரிய அளவு நீரை காவிரியில் இருந்து திருப்பி மேட்டூர் அணைக்கு விடும்வரை, உண்ணாவிரதம் தொடரும் என்று ஜெயலலிதா ஆளுநரிடம் அப்போது தெரிவித்தார்.

இப்பேச்சுக்களின் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த ஆளுநர், ''முதலில் உண்ணாவிரதம் நிறுத்தப்பட வேண்டும். உண்ணாவிரதத்தை நான் ஆதரிக்கவில்லை. உண்ணாவிரதத்தை ஜெயலலிதா கைவிட்ட பின்னர் தான் பேச்சுவார்த்தை நடத்தலாம்'' — என்று சொன்னார்.

பின்னர் ஆளுநர் தொலைபேசி மூலம் பிரதமருடன் பேசினார்.

காவிரி நீர்த் தகராறு தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் அப்போது ஆளுநரிடம் உறுதி அளித்தார்.

இதேவேளை —

பிரதமரின் உத்தரவுக்கு இணங்க, நீர் விநியோக ஆணைக்குழுவின் தலைவர் நேற்று பெங்களூருக்கும், சென்னைக்கும் விஜயம் செய்து இரு மாநில முதலமைச்சர்களுடன் பேச்சுக்கள் நடத்துவதாக இருந்தது. (த-எ)

## ஜெயலலிதா உண்ணாவிரதம் பாட்டாளி கட்சி கண்டனம்

சென்னை, ஜூலை 20

முதலமைச்சர் ஜெயலலிதாவின் உண்ணாவிரதப் போராட்டத்தை பாட்டாளி மக்கள்கட்சி கண்டித்துள்ளது.

அரசியலில் மலிவான விளம்பரத்தைப் பெறும் முயற்சி இது என்று அக்கட்சியின் தலைவர் டாக்டர் எம். இராமதாஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஊழல் விவகாரங்களில் இருந்து மக்களை திசை திருப்பும் முயற்சியாக ஜெயலலிதா உண்ணாநோன்பை ஆரம்பித்துள்ளார் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

உண்ணாவிரத போராட்டத்தை தமிழக பாரதீய ஜனதாக்கட்சி ஆதரித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறது. [த-எ]

## கிராம அலுவலர்களுக்கு அதிகரித்த பிரயாணப்படி

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கு அதிகரிக்கப்பட்ட பிரயாணப்படி, காகிதாதிகள், அலுவலக வாடகை, பதில் கடமை வேதனம் ஆகியவற்றை 1992ஆம் ஆண்டில் இருந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உட்துறை பிரதிச் செயலாளர் திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸ் வடக்கு- கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல அரசாங்க அதிபர்களுக்கும், பிரதேச செயலர்கள் உதவி அரசாங்க அதிபர்களுக்கும் இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். (த-175)

பருத்தித்துறை பிரதேச சபை

## ஆயுள்வேத ஆஸ்பத்திரியின் சேவைகள் விஸ்தரிப்பு

நெல்லியடி, ஜூலை 20

பருத்தித்துறை பிரதேச சபையின் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலையின் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

சபையின் அலுவலகம் அமைந்துள்ள புலோலியில் அமைந்திருந்த இவ்வைத்தியசாலை வாரத்தில் இருநாட்கள் சக்கோட்டையிலும், கற்கோவளத்திலும் இடம்பெயர் சேவையினை நடத்தி வந்தது.

இடம்பெயர்ந்த மக்கள் இவ்வைத்தியசாலையின் சேவையைப் பெற்றுக் கொள்வதில் பெரும் எண்ணிக்கையில் திரள்வதால் சக்கோட்டையிலும், கற்கோவளத்திலும் இவ்வைத்தியசாலையின் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கிளை இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை சக்கோட்டையில் பிரதி திங்கள், வியாழன் ஆகிய இரு நாட்களும், கற்கோவளத்தில் பிரதி செவ்வாய், வெள்ளி ஆகிய இருநாட்களும் செயல்பட்டு வருகின்றன.

இதேவேளை — ஏற்கனவே நடைபெற்றஇடம்பெயர்வைத்திய சேவையினால் வாரத்தில் ஒரிரு நாட்கள் சேவை தடைப்பட்டிருந்த புலோலியிலுள்ள பருத்தித்துறை பிரதேச சபை இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் தொடர்ந்து நிரந்தர சேவையை வழங்குமென இவ்வைத்தியசாலையின் ஆயுள்வேத வைத்தியர் திரு: வி. வேதநாதன் தெரிவித்துள்ளார். (த-109)

## விவரம் சேகரிப்பு

உடுவில், ஜூலை 20

யாழ்ப்பாண பாடசாலைகளின் பூரண விவரங்கள், ஆசிரியர் மாணவர் பற்றிய விவரங்கள் யாவும் கோட்டக் கல்வி பிரதிக் கல்விப்பணிப்பாளர்களினூடாக யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (த-152)

# விரும்பிச் செய்யும் தானம் மீண்டும் மூலதனம் தரும்

## மகளிர் இல்ல விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி

தானம் செய்யும்போது மனவிருப்பத்தோடு மற்றவர்களுக்குச் சொல்லிக் கொள்ளாமல் தானம் செய்யவேண்டும். அந்தத் தானம் மேலும் பல தானங்களைச் செய்வதற்கு மூலதனத்தைக் கொண்டுவரும்.

மகளிர் இல்ல நிதியிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஐம்பதினாயிரம் ரூபா கொடுத்தோம். அதனை அறிந்த வெளிநாட்டு அன்பர்கள் எங்களுக்குப் பண உதவி செய்கிறார்கள். இது ஓர் உதாரணம்.

இவ்வாறு தெரிவித்தார் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.

துர்க்காபுரம் மகளிர் இல்ல 11ஆவது ஆண்டு பரிசளிப்பு விழா இம்மாத முற்பகுதியில் மகளிர் இல்ல அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது. விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே சிவத்தமிழ்ச் செல்வி முன்கண்டவாறு குறிப்பிட்டார்,

அவர் தமது பேச்சில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று நடக்கும் 11ஆவது ஆண்டு விழா மகளிர் இல்லத்தினருக்கு மகிழ்ச்சி விழா. இடம்பெயர்ந்து சென்றபோதிலும் சொந்த இடத்தில் விழாக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியதே.

மகளிர் இல்லப் பிள்ளைகள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டி, வெளியார் நடத்தும் பல போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெறுவது மகிழ்ச்சி தருகின்றது. 1982இல் 9 பிள்ளைகளுடன் ஆரம்பித்த இல்லம் இன்று 52 பிள்ளைகளுடன் சிறப்பாக இயங்குகிறது— என்றார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் கூறியதாவது:-

இந்து சமயம் முன்னரும் பல தாக்கங்களைக் கண்டபோது பெண்களின் அறப்பணியால் தொடர்ந்து வளர்ந்தது. பல பெண்கள் அறப்பணிகள் நடத்தித் தெய்வீக நிலையை அடைந்தனர்.

அறப்பணிகளைச் செய்யும் ஆலயங்களே தேவஸ்தானங்களாக முடியும். துர்க்கை அம்மன் ஆலயம் எமது பகுதியின் தலை சிறந்த தேவஸ்தானம். சிவத்தமிழ்ச் செல்வி அவர்களின் நிர்வாகத் திறனால் இவ்வாலயம் சமூக, கலை, இலக்கிய சேவைகளில் முன்னுதாரணமாகத் திகழ்கிறது— என்றார்.

மாவை கந்தசுவாமி கோயில் ஆதீன கர்த்தா மகாராஜ ஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் ஆசியுரையும், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி சிவஞானசுந்தரம் வாழ்த்துரையும் நல்கினர். மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலும் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (அ-68)

## ரயில் சேதம்

சென்னை, ஜூலை 20

மதுரையில் அ. தி மு க. தொண்டர்களால் பாண்டியன் கடுகதி ரயில் சேதமாக்கப்பட்டது.

ரயிலின் கண்ணாடி யன்னல்களை அ. தி.மு.க. தொண்டர்கள் கற்களால் தாக்கி சேதமாக்கிய போது, அங்கு காவலில் இருந்த பொலீஸார் அதனைப் பார்த்துக் கொண்டு நின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)


31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் செல்லம்மா இராசையா

தோற்றம்: 05–04–1932
மறைவு: 21–06–1993

அன்போடமை வளர்த்து
ஆன்றோராய் ஆக்கி அவனியிலே
இன்பமுடன் வாழ்வில் ஏற்றிவைத்து
ஈண்டும் அவர் நினைவில்
என்றும் வாழ்ந்திடுவோம்
ஈசன்றாள் சேர்ந்தனையே சாந்தி!

– குடும்பத்தினர்.

எழுதுமட்டுவாழ்.
(26980)



A/L
மாதிரி வினாத்தாள்

A/L 93 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்காக

★ இரசாயனவியல்
★ பௌதிகவியல்
★ தாவரவியல்
★ தூயகணிதம்
★ விலங்கியல்
★ பிரயோககணிதம்
★ இந்துநாகரிகம்
★ இந்து சமயம்
★ சித்திரம்
★ பொருளியல்
★ வர்த்தகமும்நிதியும்
★ கணக்கியல்
★ அளவையியல்
★ தமிழ்
★ புவியியல்
★ கிறிஸ்தவம்
★ அரசியல்-மூலதத்துவங்கள்
★ சங்கீதம்

ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும்,

BOND
யாழ்ப்பாணம்.
(6353)



45ஆம் நாள் நினைவஞ்சலி
(20 — 07 — 1993)

தோற்றம்: 27 — 03 — 1944
மறைவு: 09 — 06 — 1993

அமரர் தா. ஆறுமுகராசா B. Com.
[ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி, கல்வித்துறை, யாழ். பல்கலைக்கழகம்]

பல்கலைதேர் கழகமதில் வணிகம் கற்றுப்
பண்புடனே அறிவுதனை அளித்த செம்மல்
கல்வியியல் மேற்படிப்புக் கற்க வந்தோன்
கலையார்வம் குலையாத கடமை வீரன்
செல்வமலி மானிப்பாய் இந்து ஆசான்
சேவைக்கோர் இலக்கெனப் பெருமை பெற்றோன்
அல்லலிலா ஆறுமுகராசா என்னும்
ஆசிரிய! மறைந்தனையே சாந்தி! சாந்தி!!

கல்விக் கழகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(26582)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சிறந்த இறைச்சிக்கு உகந்த Prima புறொயிலர்கள் நியாய விலையில் விற்பனைக்குண்டு. பன்ரம், பாமாஸ் மற்றும் விறாத்துக் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகளும் பெற்றுக் கொள்ளலாம். இல. 1010/9, கே. கே. எஸ். வீதி (நாச்சிமார் கோயிலடி), யாழ்ப்பாணம். (26579)

ஒரு கிழமை வளர்ச்சி அடைந்த புறொயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு; மல்லிகாபதி, மானிப்பாய். (26584)

### விற்பனையாகிறது!

மா. சின்னத்தம்பியின் தேசிய வருமானம் ஆண்டு 11 இற்குரிய வரலாறும் சமூகக் கல்வியும், படவேலைப் பயிற்சி செயல்நூல் இதுவரை வெளிவராத புதிய நூல். கிடைக்கும் இடம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-5485)

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளிவிடப்படும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, மகியிலன் புத்தகசாலை- யாழ்ப்பாணம் S. K. சாமி- நெல்லியடி, பளிங்கு- சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். (6352)

### தட்டெழுத்தாளர் தேவை

ஆங்கில தட்டெழுத்தாளர் எமது சங்கத்திற்கு தேவை. ஆங்கில சுருக்கெழுத்தும் தெரிந்திருத்தலோடு மல்லாகத்திற்கு அண்மையில் வாழ்பவர் விரும்பத்தக்கது. சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். சு. ஸ்ரீபாஸ்கரன், தலைவர், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம், மல்லாகம், (5997)

### ஆங்கிலமொழிப் பரீட்சை

N. C. E. தேசிய ஆங்கில சான்றுப் பரீட்சைக்குரிய, கடந்த கால வினாப்பத்திரங்கள் - மாதிரி வினா-விடை, கட்டுரைகளுடன் அமைந்த வழிகாட்டி. தொகுப்பு: த. ந. பஞ்சாட்சரம் விலை 80/-. கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தக நிலையம், Science Hall கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (சி-5487)

### உடுபுடைவை விநியோகம்

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அகதிமுகாமில் தங்கியுள்ள இருநூறுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு யாழ். அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக சமையல் பாத்திரங்கள் மற்றும் உடுபுடைவைகளை வழங்கியுள்ளது. (த-152)

### இலவச வகுப்புக்கள்

எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரண பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நலன் கருதி விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புக் கல்வி வளர்ச்சிக் கழகத்தினர் இரவு வேளைகளில் விசேட இலவச வகுப்புக்களை நவாலி மகாவித்தியாலயத்தில் நடத்தி வருகின்றனர். (த-152)

---

## ஆங்கில சுருக்கெழுத்து/தட்டெழுத்து

(மூன்று மாத இலவச பயிற்சி நெறி)

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பெயர், விலாசத்துடன், வயது, கல்வித் தகைமை, குடும்ப நிலை, இப்பயிற்சி நெறியை பயில விரும்பும் காரணம் ஆகியவற்றை குறிப்பிட்டு விண்ணப்பியுங்கள்.

முடிவு திகதி: 30 — 07 — 1993

**மெதடிஸ்த திருச்சபை புனர்வாழ்வு பகுதி**

சி. எல். எஸ். புத்தகசாலை,
570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-5400)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 15 — 08 — 1924



உதிர்வு: 20 — 07 — 1992

அமரர்

**இராசநாயகம் அலிஸ் அன்னம்மா**

"அம்மா அம்மா எங்கள் ஆருயிரே!
இரு கண்ணின் மணிபோல் விளங்கினாய் அம்மா!
மரக்கிளையில் கூடுகட்டி
இன்பமுடன் வாழ்ந்தவேளை
அந்தரத்தில் ஆடவிட்டு
ஆலமரம் போல் சாய்ந்தாயம்மா!
பேசாமல் போனதென்ன பாசப்புறா விண்ணிலே
வீசாமல் வீசுதம்மா பாசப்புயல் மண்ணிலே."

இவரின் ஆன்ம சாந்திக்காக புனித சந்தான மாதா ஆலயத்தில் இன்று (20 - 07 - 1993) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

12/2, சந்தானமாதா கோயில் ஒழுங்கை,
பாண்டியன்தாழ்வு. (26578)

---

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்

வையம் தந்தது: 19 — 09 — 1957



தெய்வம் எடுத்தது: 20 — 07 — 1989

செல்வி

**இரஞ்சித நீலா கணபதிப்பிள்ளை**

நாலாண்டு சென்றிட்டாலும்
இறைவனில் நீ வாழ்ந்திட்டாலும்
எம் துயரம் மாறாதம்மா
எமது கண்ணீர் ஓயாதம்மா!

பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள்.

47, சேர். பொன். [illegible]
யாழ்ப்பாணம். (6351)

---

## முதியோர் இல்லம்

இளம் வயதில் சுறுசுறுப்பாக பணியாற்றி...
வயது முதிர்ந்த வேளையில் எவரது
உதவியுமின்றி தனிமையில் தவிக்கிறீர்களா?

உங்களுக்காக அமைதியான சூழலில் புத்தூர் வைத்திய சாலைக்கு அருகாமையில்,

முதியோர் இல்லமொன்றை
ஆரம்பிக்கிறோம்.

பெயர், விலாசம், வயது, தங்களால் மாதாந்தம் கொடுக்கக்கூடிய தொகை ஆகியவற்றை குறிப்பிட்டு 30-07-93க்கு பிந்தாமல் விண்ணப்பியுங்கள். தனியானவர்களும், தம்பதிகளும் விண்ணப்பிக்கலாம்.

**மெதடிஸ்த திருச்சபை புனர்வாழ்வு பகுதி**

சி. எல். எஸ். புத்தகசாலை,
570, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [சி-5601]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 17-04-1923

மறைவு: 31-07-1992

திதி: 21-07-1993

திருமதி

**மகேஸ்வரி சிவஞானசுந்தரம்**

ஆண்டொன்று சென்றாலும்
தங்கள் நினைவலைகள்
என்றென்றும் நிலைத்திருக்கும்
தங்கள் ஆன்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கிறோம்.

கணவர், பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"உடையார் வளவு"
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (6340)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 12 — 08 — 1950



மறைவு: 10 — 08 — 1991

திருமதி

**இந்திராதேவி அருளானந்தம்**

திதி: 20 - 07 - 1993

எங்கள் எல்லோரையும் விட்டுப்பிரிந்து வருடங்கள் இரண்டாகியும், உங்கள் பசுமையான தோற்றமும் நினைவுகளும் எங்கள் நெஞ்சங்களை என்றும் விட்டகலாது.

கணவன், பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளை.

இராசவீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (26581)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## ஜெயலலிதாவின் அரசியல் ஸ்ரண்ட்

காவிரி நீர்த்தகராறு பற்றிய நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமுல் செய்யும்படி மத்திய அரசைக்கோரி, தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸும் தி. மு கழகமும் காவிரி நீர்ப்பிரச்சினையை முன் வைத்து இயக்கங்களை ஆரம்பிக்க இருந்த வேளையில் ஜெயலலிதாவின் இந்தத் திடீர் உண்ணாவிரதச் செய்தி அறிவிக்கப்பட்டிருப்பது தமிழ் நாட்டில் சரிந்து வரும் அவரின் செல்வாக்கைச் சரிப் படுத்தும் இறுதி முயற்சியாகவே கருதப்படுகிறது.

1991ஜூன் 21இல் தமிழ் நாடு சட்டசபைத் தேர்தலில் ஜெயலலிதாவின் அ. தி மு. க. அமோக வெற்றியீட்டியிருந்தது. முன்னையஆட்சியில் தமிழ் நாடு சட்ட சபையின் 234 ஆசனங்களில் 140 ஆசனங்களைப் பெற்றிருந்த தி. மு. க. 1991 தேர்தலில் ஓர் ஆசனத்தை மட்டும் பெற்று படுதோல்வி அடைந்தது.

அத்தேர்தலில் காங்கிரஸின் தோழமையுடன் போட்டியிட்டு ஜெயலலிதா வெற்றி பெற்றிருந்தார்.

பதவிக்கு வந்து இரண்டு வருட காலத்துக்குள் அவரது ஆட்சி தற்போது ஆட்டம் கண்டதற்கு அவர் கடைப்பிடித்த வரட்டுத் தனமான சில கொள்கைகளே காரணம்.

அவர் பதவிக்கு வந்த பின் மத்திய அரசிடம் வக்காலத்து வாங்குவதற்காக ஈழப் போராளிகள் விடயத்தில் குறிப்பாக விடுதலைப் புலிகள் விடயத்தில் கடுமையாக நடந்து கொண்டார். தனது அரசியல் லாபம் கருதி ஈழத்தமிழரின் உரிமைப் போராட்டத்தையே காட்டிக் கொடுத்தார் என்று சொல்லலாம். அத்துடன் அடைக்கலம் தேடிச்சென்ற ஈழ அகதிகளுக்கு பல வழிகளிலும் நெருக்கடிகளைக் கொடுத்தார்.

தமது ஆட்சியைத் தக்க வைப்பதற்காக அவர் எத்தகைய தந்திரங்களைக் கையாண்டாரோ அவையே அவரது அரசியல் எதிரிகளால் அவருக்கு எதிராகத் தற்போது திசை திருப்பிவிடப்பட்டிருக்கின்றன.

விடுதலைப் புலிகள் விவகாரத்தில் மெத்தனமாக நடந்து கொண்டார் என்பதே அவர் மீதான தற்போதைய பிரதான குற்றச்சாட்டு ஆகும்.

ஜெயலலிதா மீது ஊழல் குற்றச்சாட்டுக்களும் சுமத்தப் பட்டிருக்கின்றன. பம்பாய் பங்குச் சந்தை ஊழல் சூத்திரதாரி ஹர்ஷத் மேத்தாவிடம் ஒரு கோடி ரூபா லஞ்சமாக வாங்கினார் என்ற மற்றும் ஒரு குற்றச்சாட்டும் தற்போது சுமத்தப்பட்டுள்ளது.

காங்கிரஸுடனான உறவு முறிந்தமையே ஜெயலலிதா ஆட்சியின் வீழ்ச்சியின் ஆரம்பம் என்று கருதப்படுகிறது.

இந்த உறவு மோசமடைந்து பெரும் பகைமையாக உருவெடுக்கும் சாத்தியம், அடுத்த வாரம் டில்லியில் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அ. தி மு கழக எம். பிக்கள் ஆதரிக்கும்போது ஏற்படப்போகிறது.

தமிழ்நாடு ஆளுநராக இருந்த பி. என். சிங் திடீர் என இடம்மாற்றப்பட்டு அவரது இடத்துக்கு கடும்போக்காளரான டாக்டர் சென்னாரெட்டி நியமிக்கப்பட்டிருப்பது ஜெயலலிதா ஆட்சிக்கு ஓர் அபாயச் சமிக்ஞையே.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் மூலம் தமிழ் நாட்டில் சரிந்துவரும் செல்வாக்கை அவர் ஓரளவு சரிப்படுத்த நினைத்தாலும் மத்திய அரசின் கழுகுக் கண்களில் இருந்து அவர் தப்பிவிட முடியும் என்பது சந்தேகமே.

# எமது சமூக அமைப்புக்கு ஏற்றவாறு சட்டங்கள் எழுதப்பட வேண்டும்!

## சட்ட அறிஞர்கள் கலந்துரையாடலில் கரிகாலன்

யாழ்ப்பாணம், ஜூலை 20

தமிழீழ மக்களாகிய எங்களைப் பொறுத்தவரையில் எமது பண்பாடு, சமூக அமைப்பு தனித்துவமானது. இதன் அடிப்படையிலேயே பிரச்சினைகளும் எழுகின்றன. இவற்றைத் தீர்க்கும் வகையில் தான் சட்டமும் எழுதப்படவேண்டும். நாம் பெரிய சட்ட மேதைகளோ, சட்ட அறிஞர்களோ அல்ல ஆனால் இந்த மண்ணில் பிறந்த இந்த மக்களின் பண்பாடுகளோடு ஒன்றிப்போனவர்கள்.

யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சட்ட அறிஞர்களுக்கான கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

எம்மக்களின் அன்றாட தேவைகளை கவனிக்கும் முகமாகவும் இங்கே அதற்கான சிவில் நிர்வாகம் ஒன்றை அமைக்கும் முகமாகவும் தான் காவல்துறை, நீதி நிர்வாகத் துறை, பொருளாதார மேம்பாடு ஆகியவற்றுக்கான சட்ட அமைப்புக்களை நாம் உருவாக்கி வருகின்றோம்.

இன்றைய நிலையில் எதிரி எம்மை முற்றாக அழிக்க முயற்சி செய்கின்றான். மறு முனையில் எமது தேசியத் தன்மையை அழித்து பொருளாதார ரீதியில் பலவீனப்படுத்த முனைகின்றான். இவற்றுக்கு நேரடியாக முகம் கொடுக்கின்ற வேளையில் இங்கே வாழுகின்ற மக்களுக்கு சட்டமும், ஒழுங்கும் சீராக இருக்க நாம் நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது.

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நிறுத்தி சரியான சிவில் நிர்வாகத்தை நடத்த முற்படும்போது நாம் பல சிக்கல்களை எதிர்கொண்டு அதில் வெற்றி காணவேண்டும்.

எமக்கான தனியான நீதி அமைப்பை உருவாக்க வேண்டும். இதற்கு முதலில் அதற்கான சட்டங்களை உருவாக்க வேண்டும். மனிதனை மனிதன் சுரண்டாமல் இருக்கவும், அவன் எவ்வித பயமுமின்றி வாழ்வதற்காகவும் மனிதனால் உருவாக்கப்பட்டதே சட்டங்களாகும். தமிழீழப் பகுதி பல நூற்றாண்டு காலமாக அந்நியர் ஆதிக்கத்தில் இருந்ததின்காரணமாக அவர்களின் சட்ட திட்டங்கள் பலவற்றையே நாம் இன்றுபின் பற்றுகின்றோம்.

இன்று சமூகம் நாளுக்கு நாள் மாற்றமடைந்து வருகின்றது. தேவைகளும் இதற்கேற்ற வகையில் மாறுகின்றன. இதற்கேற்ற வகையில் சட்டங்களும் நெகிழ்ச்சியடையவேண்டும்.

எமது போராட்டம் முனைப்படைந்த காலத்தில் இருந்து சிங்கள ஸ்ரீலங்கா அரசினது சிவில் நிர்வாகம் செயலிழந்து மக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் இணக்க சபைகளை, நீதிமன்றங்களை ஆரம்பித்த நாம் முதற்படியாக தமிழீழத்துக்கான நீதி மன்றங்களை உருவாக்க முற்பட்டுள்ளோம். இது முழுமை பெறுவதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

இந்நீதிமன்றுகளின் நீதியாளராக இருக்கப் போகின்றவர்கள் எமது போராளிகள். இவர்கள் உலக சட்டங்கள் எல்லாவற்றையும் முழுமையாக கற்று, அறிவில், வயதில் முதிர்ந்த அனுபவமுற்றவர்கள் என்று நாம் கூறவரவில்லை. ஆனால் குடும்பம், சுற்றம் என்ற வட்டத்தில் இருந்து வெளியே வந்து இந்த மக்களையும் மண்ணையும் நேசித்த அதற்காக தங்களையே அர்ப்பணிக்க முனைந்தவர்கள். இந்த மண்ணையும், மக்களையும் காட்டிக் கொடுக்க, அழிக்க, அடிமையாக்குவதற்கு முனைந்தவர்கள் அண்ணனாக இருந்தாலும் தம்பியாக இருந்தாலும் தண்டிக்க தயங்காது செயற்படும் வகையில் வளர்க்கப்பட்டவர்கள். எம்மக்களுக்கு நீதியான முறையில் பாகுபாடற்ற முறையில் நீதி வழங்க முற்படுவார்கள். இந்த வழியில் செல்வதற்கு நீங்கள் குறுக்கே நிற்கமாட்டீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம் — என்றார்.

# இலங்கையில் தமிழருக்கு ஆபத்து ஏற்படும் அறிகுறி

## ஜனார்த்தனன் எச்சரிக்கை

சென்னை, ஜூலை. 20

இலங்கையில் தமிழர்களுக்கு பேராபத்து ஏற்படும் அறிகுறிகள் தென்படுகின்றன. இச்சூழ்நிலையில் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் இந்திய அரசாங்கத்தை வலியுறுத்தி தமிழர் பிரச்சினையில் நியாயமான தீர்வைக் காண நிர்ப்பந்திக்க வேண்டும்.

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

போராடும் இளைஞர்களை ஒழிப்பேன் என இலங்கை இராணுவத் தளபதி அறிவித்துள்ளதும்—

சிங்களக் கட்சிகள் தமிழர்களைப் புறக்கணித்து தங்களுக்குள் தேசிய அமைப்பு ஒன்றை உருவாக்க உத்தேசித்துள்ளதும் எச்சரிக்கைக்குரியவை என்றும் டாக்டர் ஜனார்த்தனன் கூறினார்.

## காங்கேசன் - பருத்தித்துறைக்கு

# பயணிகளை ஏற்றி இறக்கும் பணி செவ்வாய் மட்டுமே

யாழ்ப்பாணம், ஜூலை 20

பருத்தித்துறையில் இருந்து காங்கேசன்துறைக்கும் காங்கேசன்துறையில் இருந்து பருத்தித்துறைக்கும் இடையில் பயணிகளை சரக்கு கப்பல்களில் ஏற்றி இறக்கும் பணி, வாரத்தில் ஒருநாள்- அதாவது செவ்வாய்க்கிழமையில் மட்டுமே—மேற் கொள்ள வேண்டும்.

இப்படியான பணிப்புரை ஒன்றை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவுக்கு புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நேற்று முன்தினம் விடுத்துள்ளது.

பயணிகளை ஏற்றி இறக்கும் பணியை மேற்கொள்வதால் கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்குவது தாமதமாவதாகவும்—

இதனால் கூடுதலான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்ப வசதியாக புதிய நடைமுறையை கடைப்பிடிக்குமாறும்— புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் பணிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-3)

## திட்டமிடல் பணிப்பாளர் அலுவலகம்

நெல்லியடி, ஜூலை 20

யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளரின் அலுவலகம் ஒன்று பருத்தித்துறை துறைமுக சுற்றாடலில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைக்கு கப்பலில் வரும் பொருள்களை பாரம் எடுக்கவும், இறக்கி முடித்ததும் சரி பார்ப்பது போன்ற அலுவல்களை யாழ் திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் இவ்வலுவலகத்தில் வைத்து மேற்கொண்டு வருகிறார்.

## தபால்கள் எடுத்துச் செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 20

இன்று பருத்தித்துறையிலிருந்து புறப்படவிருக்கும் குமாரி கப்பலில் வெளியூர்களுக்கான தபால் பொதிகளை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு யாழ் பிரதம தபாலகத்திலிருந்து தபால் பொதிகள் எடுத்து செல்லப்படவுள்ளதால், அதற்கு முன்னதாக யாழ். பிரதம தபாலகத்தில் உள்ள தபால் பெட்டியில் வெளியூர்களுக்கான தபால்களை சேர்க்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-162)

## மேலும் நால்வர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 20

புதன் நல்லூர் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சின்போது காயமடைந்தவர்களில் மேலும் நால்வர் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்டனர்.

நல்லூர் சாமிப்புலத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் லட்சுமி (வயது 45), அவரது மகள் சு. யோகேஸ்வரி (வயது 19), சுந்தையா கோணேஸ்வரி (வயது 10), சிவராசா சிவதிசன் (வயது 15) ஆகிய நால்வருமே அனுமதிக்கப்பட்டவர்களாவர். (உ-15)

## காயமுற்றவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

கிளிநொச்சி கரடிப்போக்கில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சின் போது படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த — உருத்திரபுரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் அருளானந்தம் (வயது 42) — நேற்று அதிகாலை ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இவருடன் இச்சம்பவத்தில் இறந்தோர் தொகை இரண்டாக அதிகரித்துள்ளது. (உ-15)

# ருகுணுவில் வரும் மண்எண்ணெய் உடனடியாக விநியோகிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 20

நாளை புதன்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும் "ருகுணு" கப்பலில் எடுத்து வரப்படும் மண்எண்ணெய் பொதுமக்களுக்கு விநியோகிக்க வசதியாக அங்கு வைத்தே ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் இரண்டு லீற்றர் வீதம் மண்எண்ணெயை விநியோகிக்க ஏற்பாடாகியுள்ளது.

இதேவேளை—

"ருகுணு" கப்பலில் இரண்டாயிரத்து 500 பரல் மண்எண்ணெய் ஏற்றும் வேலைகள் முடிவடைந்து விட்டதாகவும்—

நேற்று முன்தினம் இரவு அக்கப்பல் வடக்கு நோக்கி புறப்பட தயார் நிலையில் இருந்ததாகவும்—யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (ஒ-3)

# சுதேச மொழியில் சகலரும் பற்று வைக்க வேண்டும்

## பரிசளிப்பு விழாவில் பேராசிரியர் உரை

உடுவில், ஜூலை 20

ஜப்பானிய மக்களைப் போல் நாமும் எமது சுதேச மொழியில் பற்றும், விசுவாசமும் கொண்டு விளங்கவேண்டும். மாணவர்கள் எளிமையானவர்களாகவும், உயர்ந்த நோக்கங்களைக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

கந்தரோடை விகந்தவரோதயக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறை பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. ப. [illegible] தலைமையில் நடைபெற்ற விழாவில் ஸ்தாபகர் உரையை முன்னாள் அதிபர் பொன். நாகரட்ணம் நிகழ்த்தினார்.

கலாநிதி சண்முகதாஸ் தனது உரையில் மேலும் கூறியதாவது:

தரப்படுத்தல் முறை எமது சமூகத்துக்கு நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. தரப்படுத்தலை வெல்ல வேண்டும் என்ற நோக்கத்துக்காக போட்டித் தேர்வுகளில் சித்தி பெற வேண்டும் என்பதற்காகவே எமது மாணவர் கல்வி கற்கின்றனர். இந்நிலை மாறி தாம் வாழ்வதற்காகவும், மற்றவர்களுக்கு சேவை செய்வதற்காகவும் அவர்கள் கற்கவேண்டும் என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மருதனார்மட கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தனது உரையில் கூறியதாவது:

மாணவர்கள் கிராமத்தில் இருந்து நகரத்துக்கு நகர்ந்து சென்று கல்வி கற்கும் நிலை மாறவேண்டும், தத்தமது ஊர் பாடசாலைகளில் பயின்று அவற்றுக்கு பெருமை தேடித் தர வேண்டும். சிறந்த கல்வியாளர்களை உருவாக்கிய இக்கல்லூரி தொடர்ந்தும் சிறப்பு நிலையில் இருக்க பெற்றோர்களே வழி சமைக்க வேண்டும் என்றார்.

கல்லூரி அதிபர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (த-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டி. ஐ. ஜியாக தமிழர்

கொழும்பு, ஜூலை 20 புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் 12 பிரதி பொலிஸ்மா அதிபர்களில் ஒருவர் தமிழர் ஆவார். சிரேஷ்ட பொலிஸ் அதிபராகக் கடமையாற்றி வந்த திரு.ரீ பேரின்பநாயகத்துக்கே இப்பதவி உயர்வு கிடைத்துள்ளது

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய 39 பொலிஸ் அதிகாரிகளில் இருந்து புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# யுத்தத்தை நிறுத்தி தீர்வுக்கு முயற்சி எடுக்க வேண்டும்

## சிங்கள வார இதழுக்கு யாழ். அரச அதிபர் பேட்டி

கொழும்பு, ஜூலை 20 கடந்துவிட்ட இருண்ட காலத்தை மறந்து, யுத்தத்தை நிறுத்தி, நிலையானதோர் தீர்வு காண புலிகளும், அரசும் புரிந்துணர்வுடனும், நம்பிக்கையுடனும் செயலாற்ற வேண்டும்.

—இவ்வாறு கருத்து வெளியிட்டார் யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர்.

கடந்த 11ஆம் திகதி வெளியான "ராவய" பத்திரிகைக்கு கொழும்பில் வைத்து பேட்டியளித்தபோதே அவர் இப்படி தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போதே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

அப்பேட்டியின் சிலபகுதிகள் வருமாறு:-

கேள்வி:- விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்போதைய நிலை என்ன?

அரச அதிபர்:- சமாதான ஏற்பாடுகள் இடம் பெறுவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதில் புலிகள் இயக்கம் அக்கறையாக உள்ளது

கேள்வி:- சமாதானமுயற்சியின் நிலை எப்படியுள்ளது?

அரசஅதிபர்:- எனது சொந்தக் கருத்தின்படி, இடையிடையே சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், இரு தரப்பினரிடையேயும் உள்ள சந்தேகப் பார்வை அதற்கு இடையூறு விளைவிக்கின்றது.

கேள்வி:- அரச ஊழியர் என்ற முறையில் உங்கள் செயற்பாடுகளுக்கு புலிகளால் இடையூறுகள் ஏற்படுவதில்லையா?

அரச அதிபர்:- எனக்கென்று பிரச்சினைகள் இல்லாமல் இல்லை. இருந்தும் அவர்கள் பெரும்பாலும் ஒத்துழைப்பு நல்குகிறார்கள். (உ-3-6)

# நாடாளுமன்றத்தின் இறைமையை 78ஆம் ஆண்டு அரசமைப்பு பறித்தது

## பிரமுகர்கள் கண்டனம்

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் "1978 ஆம் ஆண்டு அரசமைப்பை அப்படியே தூக்கி எறிந்துவிடக் கூடாது" என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறியிருந்தார். அது பற்றிய செய்தி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது.

"நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை" என்ற தலைப்பில் அகில இலங்கை சோனகர் சங்கம் நடத்திய இக்கருத்தரங்கில், மற்றும் இரு பிரமுகர்கள் தெரிவித்த கருத்துகள் இங்கு பிரசுரமாகிறது.

லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் தெரிவித்ததாவது:-

1978 ஆம் ஆண்டின் அரசமைப்புத்தான் இங்கு சர்வாதிகாரத்தைக் கொண்டு வந்தது; நாடாளுமன்றத்தின் இறைமையைப் பறித்தது.

இந்த அரசமைப்பில் சிறிய மாற்றத்தைக் கொண்டு வருவதன் மூலமோ, திருத்தத்தைக் கொண்டு வருவதன் மூலமோ இதனை ஒழுங்குபடுத்த முடியாது எனவே இக் குழந்தையை (1978 ஆம் ஆண்டின் அரசமைப்பை) அதனைக் குளிப்பாட்டிய நீருடனேயே தூக்கி எறிந்தாக வேண்டும்.

ஏனென்றால் இந்த அரசமைப்புத்தான் நாடாளுமன்றத்தின் மதிப்பைக் குறைக்கச் செய்து, நாடாளுமன்றம் —நிறைவேற்று ஜனாதிபதி ஆகிய இரு வெவ்வேறு அதிகார மையங்களை உருவாக்கியது. இரு அதிகார மையங்களை நாம் வைத்திருக்க முடியாது. அதிகாரத்தை மீண்டும் நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும் —என்றார்.

கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் ஜி எல் பீரிஸ் தற்போதைய அரசமைப்பைக் கடுமையாக விமரிசித்துப் பேசினார். அவர் கூறியதாவது:-

எம்.பிக்கள் தங்களின் மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் உரிமையை தற்போதைய அரசமைப்பு மறுத்துள்ளது, ஜேர்மன் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளின் அரசமைப்புகளில் மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் உரிமை இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்றம் அமைக்கப்பட்ட ஓராண்டின் பின்னர் அதனைக் கலைக்கும் அதிகாரத்தை தற்போதைய அரசமைப்பு ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளது. இது நாடாளுமன்றத்தை ஜனாதிபதிக்குக் கீழ்ப்படிய வைத்துள்ளது

அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் மற்றும் திட்ட அமைச்சர்கள் என பலரை, எம்.பிக்கள் மத்தியில் இருந்து நியமிக்க ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரம் எம் பிக்கள் ஜனாதிபதியின் அடிமைகளாக இருக்க வழி வகுத்துள்ளது. நிறைவேற்று ஜனாதிபதி முறை நாடாளுமன்றத்தை விழுங்கிவிட்டது

இலங்கையைத் தவிர உலகில் வேறு எங்கேயாவது நிறைவேற்று ஜனாதிபதி ஒருவர் அமைச்சர் பதவிகளை வகிப்பது கிடையாது. இது கொள்கை ரீதியில் பிழையானதாகும்; மற்றும் வழமைக்கு மாறானதும் கூட.

அவசரகால அதிகாரங்களை பயன்படுத்தி சட்டங்களை உருவாக்கும் போட்டிச் சக்தியாக ஜனாதிபதி இருக்கிறார் அவர் தேர்தல்களை நடத்தும் சட்டங்களை திருத்தவும் மாற்றி அமைக்கவும் அவசரகால சட்டங்களை பயன்படுத்த முடியும்.

நாடாளுமன்றத்தின் ஆயுள் 6 ஆண்டுகளில் இருந்து நான்கு ஆண்டுகளாக குறைக்கப்படவேண்டும் இவ்வாறு அவர் மேலும் கூறினார். (த-எ)

### டில்லியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) லத்தில் ஏற்படுத்த இதுதான் காரணம் என்றும்— ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

(முன்னர் வந்த செய்திகள் 3 ஆம் பக்கத்தில்)

### பயணிகள் வந்தனர்

கிளிநொச்சிப் பகுதியில் தங்கிநின்ற பெரும் எண்ணிக்கையான பயணிகள் நேற்றுக் காலை யாழ். வந்து சேர்ந்தனர்.

நேற்று முன்தினம் இரவு இளாலி — பூநகரி படகுச் சேவை இடம்பெற்றதை அடுத்து அவர்கள் இங்கு வந்தடைந்தனர். (உ-5-15)

### போஷாக்கு உணவு

முகமாலை சமுத்திரன் குடியிருப்பில் உள்ள கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் ஆகியோருக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக பளைப் பிரிவினர் போஷாக்கு உணவுகளை வழங்கி வருகின்றனர்.

### கட்டுப்பாடு

மினி பஸ்ஸின் கூரைக்கு மேல் எக்காரணம் கொண்டும் பயணிகளை ஏற்றக்கூடாது. இதனை மீறி பயணிகளை ஏற்றும் மினி பஸ் உரிமையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வடமராட்சி இந்து சேவைச்சங்கம் [illegible] அறிவித்துள்ளது (உ-103)


## யாழ். மத்திய கல்லூரி நிறுவுநர் தினச் சுழல் கேடயம்

யாழ். மத்திய கல்லூரியின்
175ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு
யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க
அனுசரணையுடன்
மத்திய மணிகளால் (சென்றலைட்ஸ்)
நடத்தப்படும்

மாபெரும்
துடுப்பாட்டப் போட்டி - 1993

ஆறு வீரர்கள் அணிகளிடையே ஆறு ஓவர்களைக் கொண்ட விலகல் முறைச் சுற்றுப் போட்டி

விண்ணப்ப இறுதித் தினம்: 28 - 7 - 93
அணி ஒழுங்குத் தெரிவு 29 - 7 - 93
மாலை 4.30 மணி
யாழ் மத்திய கல்லூரியில்

போட்டிகள் நடைபெறும் தினம்:
31 - 7 - 93 — 1 - 8 - 93

பிரவேசக் கட்டணம் 100/-

விண்ணப்பப் படிவங்களைப்பெற,
எஸ். பிறேம்குமார்,
செயலகம்,
யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்

பழைய மாணவர் சங்கம்,
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

19 - 7 93. [இ-5489]


## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை காராளசிங்கம்

வடலியடைப்பு அரசடி வீதியைச் சேர்ந்த காராளசிங்கம் 19 - 07 - 93 திங்கட்கிழமை அன்று காலமானார். இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும் சரோஜினிதேவியின் தந்தையும் தெட்சணாமூர்த்தியின் (யாழ் மாநகர சபை நீர்வேலைப் பகுதி) மாமனாரும், அருட்குமாரின் பேரனாரும், காலஞ்சென்ற கனகசிங்கம், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, ஜெகசோதி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 20-07-93) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அரசடி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
தெட்சணாமூர்த்தி

அரசடி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(26590)

### திருமதி யோகசௌந்தரி நகுலேஸ்வரன்

(புலோலி கிழக்கு)

திருமதி யோகசௌந்தரி நகுலேஸ்வரன் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஓவசியர் முருகேசு யோகேஸ்வரி தம்பதிகளின் மூத்த புதல்வியும், நகுலேஸ்வரனின் (மின்சார அத்தியட்சகர், நகரசபை, பருத்தித்துறை), அன்புச் மனைவியும், யோகசுந்தரம், யோகசம்பந்தன், யோகராசா, யோகரஞ்சிதம், யோகநாதன், யோகரதி ஆகியோரின் அன்பு சகோதரியும், யோகீதா, அருணன், யோகாஞ்சலி யோகாஞ்சனா, யோகினி, யோகானந்தி, பைரவி, வித்தியாதரன் ஆகியோரின் மூத்த மாமியும், திருமதி புவனேஸ்வரி திருஞானசம்பந்தரின் பெத்தம்மாவும் ஆவார். இறுதிக் கிரியைகள் நாளை (21-07-93) புதன்கிழமை காலை 10-00 மணிக்கு 54, காமஸ் அவனியூ வெள்ளவத்தையில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். அன்று காலை 10-00 மணிக்கு புலோலி கிழக்கு யோகவாசா இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

தகவல்:
இ. யோகரஞ்சிதம்.
(சகோதரி)

(26585)

### தாமோதரம்பிள்ளை வைத்திலிங்கம்

(பத்தர்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடி, தாமோதரம்பிள்ளை வைத்திலிங்கம் 16-07-1993 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் சிவரத்தினத்தின் அன்புக்கணவரும், சத்தியமூர்த்தி (டென்மார்க்), தனலெட்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசின் மாமனாரும், ரகுராம், ரஜீவன், நிரோஷன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சண்முகம், கிருஷ்ணசாமி, கலஞ்சென்ற பாலசிங்கம், மகாலட்சுமி, அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரரும், இவானந்தன், கதிர்காமத்தம்பி, நடராசா, இராசரெத்தினம் காலஞ்சென்ற இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனருமாவார்,

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:
தா. கிருஷ்ணசாமிப்பத்தர்
(சகோதரர்)

628/2, நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(26589)

### வன்னியசிங்கம் தங்கராசம்

காலஞ்சென்ற மலாயன் பென்ஷனியர் வன்னியசிங்கத்தின் பாரியார் தங்கராசம் நேற்றுக் காலமானார்.

அன்னார் திருமதி புவீந்திரன், இரத்தினசிங்கம் (றான்ஸ்போட் பிஸ்னஸ், கொக்குவில்), இராஜசிங்கம் (கட்டடவரைபடக்கலைஞர், கொழும்பு), செல்வி வன்னியசிங்கம் (உப முகாமையாளர், இலங்கைவங்கி, யாழ். உயர் தரக்கிளை), T V. பாலா (புத்தகசாலை இணுவில்), திருமதி தேவகிருஷ்ணா (மானிப்பாய் மகளிர் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி களில் கடமையாற்றியவரும், தற்போது கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆசிரியரும்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 553, கஸ்தூரியார் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. பாலசிங்கம்

553, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[26591]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/[illegible] இலுள்ள அச்சகத்தில் 20-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org